பணிகளை செய்து வருகிறார்கள். அதற்கு மத்திய அரசு என்ன நடவடிக்கை இதுவரை எடுத்தது என்ற வினாவை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது கருத்தைத்தான் பதிவு செய்திருக்கிறார்.*

திரு. கே. கோபிநாத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல், அந்த நிதி எந்தவிதமான diversion-ம் ஆகாமல் பார்த்துக்கொள்ள, அதனைக் கண்காணிப்பதற்கு ஒரு துறைகள், செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைத்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் நீக்கிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. எதிர்க்கட்சிகள் தங்களுடைய எதிர்ப்பை ஜனநாயக முறையில் தெரிவித்திருக்கலாம். ஆனால் அதை விடுத்து, வன்முறையைத் தூண்டுவதைப்போல பேரவைத் தலைவரின் இருக்கைக்கு வந்து விதிகளுக்குப் புறம்பாக, இதுவரை கடைப்பிடிக்கப்பட்டுவரும் மரபுகளுக்கு மாறாக நின்றுகொண்டு, பேரவையின் கண்ணியத்தையும், மாண்பினையும் குறைக்கும் வகையில் ஆட்சேபகரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, பேரவைத் துணைத் தலைவரின் ஆணையை மீறி பொறுப்பற்றதனமாக கூச்சலிட்டு, பேரவையின் பணிகள் நடைபெறவிடாமல் இடைமறித்ததும், பேரவை விதிகளுக்கு மாறாக அவையில் குந்தகம் செய்து வந்ததாலும், இச்சட்டமன்றக் கூட்டத் தொடரில் இன்று இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்டுள்ளதாலும், பேரவை விதி 120-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை இந்தக் கூட்டத் தொடர் காலத்திற்கு இப்பேரவைப் பணிகளிலிருந்து நீக்கி வைக்க ஆணையிடுகிறேன்.*